# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


"உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்." மத் 5:46-48)

# "Querida Amazonia"
# அமேசான் திருத்தூது அறிவுரை மடல் வெளியிடப்பட்டது



## திருத்தந்தையின் , "அன்புக்குரிய அமேசான்" (Querida Amazonia) திருத்தூது அறிவுரை மடல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையில், வத்திக்கானில் கடந்த 2019-ஆம் ஆண்டு அக்டோபர் 6-ஆம் தேதி முதல் 27ம் தேதி முடிய, அமேசான் பற்றிய சிறப்பு உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெற்றது நாம் அறிந்த ஒன்று. இந்த மாமன்றத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை மையமாக வைத்துத் திருத்தந்தை உருவாக் கிய **'அன்புக்குரிய அமேசான்'** எனும் Querida Amazonia திருத்தூது அறிவுரை மடல் கடந்த 12-ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இஸ்பானிய மொழியில் திருத் தந்தை உருவாக்கியுள்ள இந்த அறிவுரை மடல் நான்கு பிரிவுகளையும் 111 பத்திகளையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. பல்வேறு கவிஞர்களின் உதவியுடன், திருத்தந்தை, அமேசான் பகுதியின் அழகையும், அப்பகுதியைக் குறித்து நாம் அவசியம் அறிய வேண்டிய மதிப்பையும் ஒரு காதல் கடிதம் போல் உணர்த்தியுள்ளார்.

இந்த அறிவுரை மடலாது காலத்துக் கேற்ற ஒரு வரவு என்று துணிந்துக் கூறும் அளவுக்குத் திருஅவையில் ஒரு தாக்கத்தைக் கொண்டு வரும் என்பது உறுதி. இந்த அறிவுரை மடலின் சுருக்கத்தை வலப் பக்கம் காணலாம். ஒவ்வொரு கத்தோலிக்கரும் வாசித்தறிந்து விளக்கம் பெற வேண்டியது

## அன்புக்குரிய அமேசான்' (Querida Amazonia)

### முன்னுரை

தென் அமெரிக்காவில் ஒன்பது நாடுகளில் பரவியுள்ள அமேசான் பருவமழைக் காடுகள், உலகின் மிகப் பெரிய வனப் பகுதியாகும். நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியின் நுரையீரல் என்றழைக்கப்படும் இக்காடுகளிலிருந்து உலகிற்குத் தேவையான இருபது விழுக்காடு பிராணவாயு (Oxygen) உற்பத்தி ஆகிறது.

கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப் பட்ட கடும் சுற்றுச்சூழல் நடவடிக்கைகளையும் மீறி, அமேசான் பருவமழைக் காடுகள் விருப்பம் போல் அழிக்கப்பட்டு 12 விழுக் காடு, அதாவது 9 கோடியே 30 இலட்சம் ஏக்கர் நிலமானது, தற்போது விவசாய நிலமாக மாற்றப்பட்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் அத்துமீறல் நடவடிக்கைகளால், அமேசான் மழைக் காடுகளின் 25 விழுக் காட்டுப் பகுதி அழிந்துபோயுள்ளது.

இந்த சூழலில், கடந்த ஆண்டு கோடையில் அமேசான் மழைக் காடுகளில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டு, உலகையே கவலைக் குள்ளாக்கியது. ஏற்கனவே சுற்றுச் சூழல் சீர்கேட்டால் மனித சமுதாயம் அனுபவித்து வரும் காலநிலை மாற்றத்தின் எதிர்விளைவுகள் மற்றும், வாழ்வின் அடிநாதத்திற்கே உலைவைக்கும் அச்சுறுத்தலை எதிர் கொள்ளும் பழங்குடியின மக்களின் பாதுகாப்பது ஆகியவை பற்றி திருஅவை மிகுந்த கவலை கொண்டுள்ளது. எனவே, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையில், வத்திக்கானில் கடந்த 2019ம் ஆண்டு அக்டோபர் 6ம் தேதி முதல் 27ம் தேதி முடிய, அமேசான் பற்றிய சிறப்பு உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெற்றது.

### அன்புக்குரிய அமேசான்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்த மாமன்றத்தில் ஆயர்கள் நிறைவேற்றிய தீர்மானங்களை, "Querida Amazonia", அதாவது, "அன்புக்குரிய அமேசான்" என்ற தலைப்பில், திருத்தூது அறிவுரை மடல் ஒன்றை உருவாக்கியுள்ளார். உலகில் பரபரப்பாக எதிர்நோக்கப்பட்ட இந்த அறிவுரை மடல், பிப்ரவரி 12, கடந்த புதனன்று செய்தியாளர் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. இஸ்பானிய மொழியில் உருவாக்கப்பட்டுள்ள இம்மடல், நற்செய்தி அறிவிப்பிற்கும் சுற்றுச்சூழல் மற்றும், வறியவர்கள் மீது அக்கறை கொள்வதற்கும் புதிய பாதைகளைக் கண்டுள்ளது. இந்த அமேசான் பகுதிக்கான திருத்தந்தையின் நான்கு கனவுகள் இம்மடலில் விவரிக்கப் பட்டுள்ளன.

### I.சமுதாயக் கனவு:

மேற்கத்திய காலனி ஆதிக்கத்தால் அமேசான் நிலப்பகுதி எவ்வளவு தூரம் சிதைந்துள்ளது என்பதை, ஆப்பிரிக்க மற்றும், அமேசான் பகுதி கவிஞர்களின் வரிகளில் காண்கிறோம். அப்பகுதியில், குடிநீர் வளப்பகுதிகளைத் தனியார் மயமாக்குதல், கட்டுப்பாடற்ற வகையில் மரங்கள் வெட்டப்படுதல், பழங்குடியின மக்களை விரட்டியடிக்க வேண்டுமென்றே காடுகளைத் தீ வைத்து கொளுத்துதல் போன்ற குற்றங்கள் இடம் பெறுகின்றன. உண்மையான சுற்றுச்சூழல் அணுகுமுறை, ஒரு சமுதாய அணுகு முறையாகும். அது பழங்குடியின மக்களின் நல்வாழ்வை மதிப்பதாயும் மண்ணின் மைந்தர்களான பழங்குடியின மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் குற்றங்கள் களையப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாயும் அமைய வேண்டும். அமேசான் பகுதியின் வருங்காலம் பற்றிச் சிந்திக்கையில், காடுகளைவிட்டு, நகரங்களுக்கு கட்டாயமாகப் புலம்பெயரும் கடுமையான அநீதிகளை எதிர்கொள்ளும் பழங்குடியினத்தவர், வறியோர், மற்றும் சமுதாயத்தில் மிகவும் நலிவுற்ற சகோதரர், சகோதரிகள் ஆகியோரின் குரல்கள் கேட்கப்படுவதற்கும் ஆவன செய்யப்பட வேண்டும். எனவே, அமேசான் பகுதி முதலில், ஒரு சமுதாய கலந்துரையாடல் இடமாக மாற வேண்டும். அப்பகுதியில், ஏழைகளின் குரல், மிகவும் அதிகாரம் கொண்ட குரலாக அமைய வேண்டும். இவ்வாறு திருத்தந்தை, தனது சமுதாய கனவு பற்றி முதல் பிரிவில் விளக்கியுள்ளார்.

### 2.கலாச்சார கனவு:

இந்த அறிவுரை மடலின் இரண்டாவது பிரிவை, தனது கலாச்சார கனவுக்கென திருத்தந்தை அர்ப்பணித்துள்ளார். அமேசான் பகுதி, மனித நேயத்தின் அழகு, பல்வேறு வடிவங்களில் ஒளிரும்படி, தனக்கே உரிய கலாச்சாரக் கருவூலங்களைப் பேணிக்காக் கின்றது. அமேசான் பகுதியை முன்னேற்று வது என்பது, கலாச்சாரப்படி ஆதிக்கம் செலுத்துவது என்பதல்ல. அப்பகுதியில் இடம்பெறும் காலனி ஆதிக்கத்தின் நவீனமுறை வீழ்த்தப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தங்களின் கலாச்சாரங் களைப் பராமரிப்பது உடனடியாகத் தேவைப்படுகின்றது. மனிதர்களை, நுகர்வுப் பொருள் என்ற கண்ணோட்டத்துடன் நோக்குவது, கலாச்சாரங்கள் மீது, குறிப்பாக, இளைஞர்கள் மீது எதிர்தாக் கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இளைஞர்கள் தங்களின் சொந்த கலாச்சாரங்கள் பாதுகாக்கப்படுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இளைஞர்கள், தங்களின் நினைவுகளிலிருந்து சிதைந்துள்ளவற்றை மீட்க வேண்டும் என்று தனது இரண்டாவதுகனவில் கேட்டுக் கொண்டுள்ள திருத் தந்தை, பல கலாச் சாரங்களின் சந்திப்பு பற்றியும் விளக்கியுள்ளார்.

*தொடர்ச்சி, அடுத்தப்பக்கம்*

# ஸ்கூடாய் கத்தோலிக்க மைய மறைக்கல்வி ஆசிரியர்களின் ஏற்பாட்டில் போர்ட்டிக்சன் சுற்றுலா

**ஜோகூர்**: கடந்த 22-11-2019 அன்று, ஸ்கூடாய் கத்தோலிக்க மைய மறைக்கல்வி ஆசிரியர்களின் ஏற்பாட்டில். தமிழ் திருத் தூதுப் பணிக்குழு ஆதரவுடன் போர்ட்டிக்சன் சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 10 ஆசிரியர்களும் 7 முதல் 12 வயதுக்கு உட்பட்ட 30 மாண வர்களும் கலந்து கொண்ட இப் பயணத்தை அருட்தந்தை ஜேம்ஸ் இரா ஜேந்திரன் அவர்கள் ஆசி வழங்கி வழியனுப்பி வைத்தார்.

போர்ட்டிக்சன் அமலோற்பவ அன்னை ஆலயத்தில் பங்குத் தந்தை அருட்தந்தை தெரன்ஸ் குழுவினரை வரவேற்று சிற்றுண்டி வழங்கினார். ஆலய திருப்பண்டக அறை பொறுப்பாளர் சகோ. ஜோசப் அவர்கள் ஆலயத்தின் வரலாற்றையும் திருப்பண்டக அறை பொறுப்புகள் பற்றியும் இதர விபரங் களையும் விவரித்தார். பின்னர் அருட்தந்தை தெரன்ஸ் அவர்களால் திருப்பலி கொண் டாடப்பட்டது.

அடுத்து "Eagle Ranch" எனும் இடம் சென்றடைந்தோம். அங்கு புதையல் தேடும் போட்டியும் லிமெட்ச் விளை யாட்டுகளும் நடைபெற்றன. இது ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து விளையாட வாய்ப்பாக இருந்தது. அடுத்து குதிரை சவாரி மற்றும் கோ கார்ட் (go cart) போன்றவற்றிலும் கலந்து, களிப்புற்று, அன்றிரவு 10.00 மணியளவில் இறைவனின் தயவால் இனிதே ஸ்கூடாய் வந்தடைந் தார்கள்.

-DJ



*போர்டிக்சன் சுற்றுலாவில் பங்கேற்ற மறைக்கல்வி மாணவர்கள் ஆசிரியர்களோடு*

# அன்புக்குரிய அமோசான்' (Querida Amazonia)

## (முதல் பக்கத் தொடர்ச்சி)

இயற்கையோடு இயைந்து வாழ்வதால் ஒரு கலாச்சார கருவூலத்தை வளர்த்துக் கொண்டுள்ள மக்களிடமிருந்து, மிகவும் வளர்ச்சியடைந்துள்ள கலாச்சாரங்களைக் கொண்டிருக்கிறோம் எனச் சொல்பவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே பன்மைத்தன்மை ஒரு சுவர் அல்ல, மாறாக, அது ஒரு பாலம். இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, அழிவை எதிர்கொள்ளும் கலாச்சாரங்கள் மற்றும், மக்கள் பற்றியும் விளக்கியுள்ளார். மக்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், தாங்கள் பிறந்த மற்றும் வளர்ந்த சுற்றுச்சூழல் சேதமடையாதது மற்றும் பாதிக்கப்படாதது என்ற செய்தியை அம்மக்கள் கேட்க வேண்டும்.

### 3.சுற்றுச்சூழல் / மக்கள் பராமரிப்பு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அம்மடலின் மூன்றாவது பிரிவில் தனது சுற்றுச்சூழல் கனவு பற்றி விவரித்துள்ளார். இப்பிரிவில், அமேசான் நிலப்பகுதியில், மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது பற்றி கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆண்டவர் நம்மைப் பராமரிப்பது போன்று, நம் சகோதரர், சகோதரிகளைப் பராமரிப்பதே, நமக்குத் தேவைப்படும் முதல் சுற்றுச் சூழலாகும். சுற்றுச்சூழலைப் பராமரிப்பதும், ஏழைகளைப் பராமரிப்பதும் பிரிக்க முடியாதவை. சுற்றுச்சூழல் கனவு என்பது, இயற்கையை அழிக்கும் தொழில்நுட்ப மற்றும், நுகர்வுத்தன்மையிலிருந்து நாம் விலகியிருக்க உதவுகின்றது.

உலகம் நலமுடன் இருப்பதற்கு, அமேசான் பருவமழைக்காடுகளும் நலமுடன் இருக்க வேண்டும். அமேசான் நிலப்பகுதி உலகின் நுரையீரல் என்று பல அறிஞர்கள் கூறியுள்ளனர். மேலும், பழங்குடியின மக்கள் மத்தியில் திருவழிபாடு பண்பாட்டு மயமாக்கப்பட வேண்டும். ஓர் அமேசான் வழிபாட்டுமுறையை வளர்ப்பதற்கு, ஆயர்கள் மாமன்றத்தில் பரிந்துரைக்கப்பட்டது. திருவருள்சாதனங்கள், ஏழைகளுக்கு கிடைக்கும் வழிவகை செய்ய வேண்டும் என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

### 4.திருஅவை கனவு: திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "Querida Amazonia" என்ற தன் திருத்தூது அறிவுரை மடலின் இறுதியில், அமேசான் பகுதிக்கு, தூதுரைப் பணியாளர்கள் அனுப்பப்பட வேண்டியதை, திருஅவைக் கனவாகச் சொல்லி, இம்மடலை நிறைவு செய்துள்ளார்.

கலாச்சாரத்தில் வேரூன்றிய வண்ணம் திருஅவை செயலாற்ற வேண்டும். கத்தோலிக்கத் திருஅவையில், பணித்துவ முறைகளிலும், அதிகார கட்டமைப்பிலும் மாற்றங்களை உருவாக்க துணிவு பெறவேண்டும். வழிபாட்டு முறைகளும், திருஅவையின் பணித்துவ முறைகளும் அமேசான் பகுதியின் கலாச்சாரத்தோடு வேரூன்றியிருக்க வேண்டும்.

திருப்பலி நிறைவேற்றுவது மற்றும், ஒப்புரவு அருளடையாளம் வழங்குவது ஆகிய இரு பணிகளும் அருள்பணியாளர்களுக்கென குறித்து விடப்பட்ட தனித்துவமான பணிகள் என்பதை தெளிவு படுத்தியுள்ள திருத்தந்தை, அமேசான் பகுதியில், அருள்பணித்துவம் எவ்வகையில் மக்களுக்கு உதவியாக இருக்க முடியும் என்பது குறித்து சிந்தித்துப் பார்க்கவும் அழைப்பு விடுத்துள்ளார். அப்பகுதியில் மத நம்பிக்கை வளர்வதற்கு பெண்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். எனவே திருஅவையில் அருள்பணித்துவ ஆதிக்க மனப்பான்மையின்றி பெண்களுக்கு புதிய இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் சிறப்பாக வலியுறுத்தியுள்ளார்.

அமேசான் பகுதியில் ஏழைகளைப் பாதுகாப்பதற்கு கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும். தாங்கள் வாழும் பகுதிகளில் வேரூன்றி, தாராள அர்ப்பண உணர்வுடன் அமேசானின் உண்மை இயல்பைக் காட்டும் புதிய முகங்களை திருஅவைக்கு வழங்கும் கிறிஸ்தவப் பணிக்குழுக்கள் உருவாக வேண்டும். இவற்றையெல்லாம் திருத்தந்தை, தனது நான்காவது கனவாக வெளியிட்டுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள இந்த அறிவுரை மடலில் காணப்படும் ஒவ்வொரு விளக்கமும் உலகை அன்பு செய்யும் ஒவ்வொரு மனிதராலும் வாசிக்கப்பட்டு கிரகிக்கப்பட வேண்டும்.

ஆர்.கே.

### 22-ல் 16-வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது

பல்வேறு பிரச்சனைகளால் புலம்பெயரும் மக்களின் நிலை இம்மன்றத்தின் முக்கிய விவாதப் பொருளாக இருக்கும் என்று எதிர்பாக்கப்படுகிறது.



# மலேசிய ஆயர் மன்றத்தின் திருநீற்றுப் புதனுக்கான பரிந்துரைகள்

## விபூதி புதனுக்கான மேய்ப்புப்பணி பரிந்துரைகளும் வழிகாட்டியும்

இந்த ஆண்டு பிப்ரவரி 26, 2020 அன்று வரும் விபூதி புதன் அல்லது திருநீற்றுப் புதன் நோன்பின் புனித காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே, ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் நமது பங்குகளில் திருப்பலியில் கலந்துகொள்வதற்கும், பாரம்பரியப்படி விபூதியைப் பெறுவதற்கும் வருவார்கள் என்பதை நாம் எதிர்ப்பார்க்கிறோம்.

COVID-19 எனும் (வுஹான் கொரோனா வைரஸ்) பரவுதலால் தொடர்ந்து ஏற்படும் அபாயங்களைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக மனிதனுக்கு மனிதன் தொட்டுணரக்கூடிய தொடர்பு மூலம் தொற்றுவதைக் கட்டுப்படுத்த, மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் பேராயர்கள் / ஆயர்கள் பின்வரும் நடைமுறைகளை பரிந்துரைக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

எங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து பங்குகளிலும் மற்றும் திருப்பலிக் கொண்டாடப்படும் மையங்களிலும் விபூதி ஏற்பதில் பின்வரும் வழிமுறைகள் கவனிக்கப்பட வேண்டும்:

அ) விபூதி பூசும் பணியில் ஈடுபடும் திருப்பணியாளர்களும் இதர அசாதாரண (பொதுநிலை) பணியாளர்களும் விபூதி பூசும் முன்னும் பின்னும் தங்கள் கைகளை நன்கு கழுவி கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

ஆ) உரோமில் நீண்டகாலமாகப் பின்பற்றப் படும் வழக்கத்தைத் தொடர்ந்து, ஒரு நபரின் உச்சம் தலையில் ( திருப்பலி நூலில் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறை ஒன்றைக் கூறும்போது) உலர்ந்த சாம்பலைத் தூவி பணியாளரால் விபூதி பூசுதல் சடங்கு நிறைவேற்றப்படும்.

**ஈரப்பதமான சாம்பலுடன் ஒரு நபரின் நெற்றியில் சிலுவை வரைவதற்கான முந்தைய உள்ளூர் வழக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.**

இ) விபூதி தூவும் முன் சாம்பலில் எந்த புனித நீரையும் (தீர்த்தம்) சேர்க்கக் கூடாது.

விபூதி புதன் ஒரு கடன் திருநாள் அல்ல. மேலும் விபூதி பூசுவதும் கட்டாயமில்லை என்றாலும், தற்போதைய கோரானா வைரஸ் நெருக்கடி நிலையிலும் இந்த சடங்கு நடைமுறையைக் கடைபிடிக்க விரும்புகிறோம், தொட்டுணரக்கூடிய தொடர்பு மூலம் தொற்றும் நோய்களின் அபாயங்களைக் குறைக்கவே மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

*அருட்கருவி பக்திமுயற்சிக்கான வழிகாட்டி எண் 125 பின்வருமாறு கூறுகிறது:*

*"விபூதி அல்லது சாம்பல் ஏற்கும் செயல் பலவீனம் மற்றும் இறப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது. மேலும் கடவுளின் கருணையால் மீட்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் குறிக்கிறது. இது வெறும் வெளிப்புறச் செயலாக இல்லாமல், திருமுழுக்குப் பெற்ற நம்பிக்கையாளர்கள் தவக்காலத்தின் போது அதன் உள்ளார்ந்த முக்கியத்துவத்தை உணர உதவ வேண்டும் என்பதற்காக . விபூதியை அல்லது திருநீற்றைப் பயன்படுத்துவதைத் திருஅவை கடைபிடித்து வருகிறது. இது அவர்களின் மனமாற்றத்திற்கும் பாஸ்கா உறுதிப்பாட்டைப் புதுப்பிப்பதற்கும் உதவுகிறது."*

தற்போதையச் சூழ்நிலைக்காக ;நாம் தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம். நமது திருஅவை ஆண்டின் இந்த தூய்மையான காலத்தில் நம்மை தூய்மைக்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கும்போது, நமது வேண்டுதல்கள், தியாகங்கள், நோன்பு மற்றும் பிற தவ முயற்சிகள் யாவும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும், அதிக துன்பங்களுக்கு ஆளானவர்களுக்கும், இந்த நெருக்கடி மற்றும் அதன் தடுப்புக்குத் தொடர்ந்து ஆபத்துக்களுக்கிடையே போராடி வருவோருக்கும் அர்ப்பணிக்க மறக்க வேண்டாம்.

ஆயர் மன்றத்தின் பேராயர்கள் மற்றும் ஆயர்கள் சார்பாக, நான் உங்களுக்குத் தூய தவக்கால வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

+ Most Reverend Julian Leow Beng Kim, D.D.
President Catholic Bishops Conference of Malaysia

# பகைக்கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்

இன்றைய வாசகங்கள் பகைவருக்கு அன்பு எனும் செய்தியை மையப்படுத்தி நமக்கு அறிவுரை கூறுகின்றன. இங்கு, இறைவனின் குணங்களான இரக்கமும் மன்னிப்பும் அதற்கு மணிமுடியாகத் புனிதமும் தந்தையின் குணங்களாக நாம் பார்க்கின்றோம். வழக்கமாக நாம் பிறரிடமிருந்து மன்னிப்பையும் இரக்கத்தையும் அளவுக்கதிகமாக எதிர்பார்க்கும் வேளையில் அவற்றைப் பிறரோடு பகிர்வதில் முனைப்புக் காட்டுவதில்லை.

பழைய ஏற்பாட்டில் "பல்லுக்குப் பல், கண்ணுக்கு கண்" என்பதெல்லாம் சட்டங்களாக இருந்தன. அப்போதைய காலக் கட்டத்தில் மக்களும் இதை ஒரு சரியான தீர்வாக எடுத்துக்கொண்டனர். ஆனால், ஆண்டவர் அருளும் இரக்கமும் உள்ளவர் என்று தியான பதிலுரை நமக்கு எடுத்துரைக்கிறது. . உன்மீது நீ அன்பு கூர்வது போல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" என்பதை இறைவன் வலியுறுத்திக்கிறார். முதலாவதாக ஒருவர் நமக்கெதிராகத் தீமை செய்கிறபோது நாமும் பதிலுக்குத் தீமை செய்தால் வன்முறையும், சண்டைச் சச்சரவுகளும்தான் பெருகுமே ஒழிய அமைதி பிறக்க வழியில்லை.

இன்றைய உலகைப் பார்க்கின்றபோது அடித்தவர்களைத் திருப்பி அடிக்கின்ற ஒரு போக்கும், துன்பம் இழைத்தவர்களுக்கு பதிலுக்குத் துன்பம் இழைக்கின்ற போக்குதான் அதிகமாகக் காணப்படுகின்றது. இத்தகைய சூழலில்தான் நாம் தீமைகளுக்கு நன்மையையும், பகைவர்களுக்கு அன்பினையும் செலுத்த அழைக்கப்பட்டிருக்கிறோம். இது ஒரு புரட்சி. இயேசு கொர்ந்த மாபெரும் புரட்சி. கடவுள் அன்பாக இருக்கிறார். அன்பு செய்தாருக்குப் பதிலன்பு காட்டுவது சாதாரண மானிடப் பண்பு. நம்மை வெறுப்பவருக்கும் அன்பு காட்டுவது, நன்மை செய்வது என்பது தெய்வீகப் பண்பாகும் இதைத்தான் கிறிஸ்து வாழ்ந்து கற்றுக்கொடுக்கிறார்.

. ஆண்டவர் அருளும் இரக்கமும் உள்ளவர் என நமக்கு இன்றைய பதிலுரை பல்லவி போதிக்கிறது. தந்தை தம் குழந்தைகள் மீது காட்டும் அன்பைப் போல நம்மீது அன்பு காட்டுகின்றார் அதனால், தம் மகனை நமக்காக அனுப்பி, அவர் எவ்வாறாக இருக்கிறார் எனபதை நமக்கு கூறினாரோ அவ்வாறெல்லாம் வாழ்ந்து காட்டிச் சென்றார் இறைமகன் இயேசு. அடுத்ததாக தீமைசெய்பவர்களுக்கு நன்மை செய்கிறபோது அல்லது பகைவர்களை மன்னித்து அன்புசெய்கிறபோது நாம் விண்ணகத் தந்தையின் மக்களாகின்றோம். அதைத்தான் நற்செய்தியில் இயேசு, " அவர் (கடவுள்) நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்" என்று கூறுகிறார்

எனவே தந்தை இறைவனின் புனிதமும், இரக்கமும் அருளும் நம்முடைய குணங்களாக மாறிடவும், அதற்காக நாம் ஒவ்வொரு நாளும் இயன்ற அளவில் முயற்சிகளை எடுப்போம். கடந்த காலப் பழிவாங்கும் குணத்தைத் தவிர்த்து, நம் மீட்பராகிய இறைமகன் வாழ்ந்து காட்டிச் சென்ற குணங்களை நாம் நம்முடைய தாக்கிக் கொள்வோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின்பொதுக்காலம் 7-ஆம் ஞாயிறு**

சீராக்/ Sir 15: 15-20
திபா/Ps 119: 1-2. 4-5. 17-18. 33-34
1கொரி/1 Cor 3: 16-23
மத்/Mt 5: 38-48

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**

**திருப்புகழ் மாலை : வாரம் 3**